06.04.2026

அ.வ.எண். 529/2017

வா.சா.2 – திரு. விவேக், த/பெ. பழனிச்சாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 06.04.2026 is accordance with the provision of Act X of 3331

**2 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சார்பு நீதிமன்ற அ.வ.எண்.450/2011 வழக்கில் எங்களது தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். அந்த எதிர் வழக்குரையை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.21 சார்பு நீதிமன்ற அ.வ.எண்.450/2011 வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 4.60 செண்ட் என்றால் சரிதான். அந்த வழக்கில் வாதி(இந்த வழக்கில் பிரதிவாதிகள்) தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து ஆவணம் எதுவும் குறியீடு செய்யவில்லை என்றால் தெரியாது.

2. அ.வ.எண்.450/2011 ல் நீதிமன்ற ஆணையர் நியமிக்க வேண்டியும், மேற்படி வழக்கில் எல்லைகள் நிர்ணயம் செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் இல்லை. மேற்படி வழக்கு மேற்சொன்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கை, இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி ரங்கசாமி தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி ரங்கசாமி 5 மாதங்கள் உடல்நிலை சரியல்லாமல் படுக்கையில் இருந்தபடியே காலமாகிவிட்டார் என்றால் பொய். மேற்படி ரங்கசாமி படுக்கையில் இருந்து வழக்கை நடத்தாததால் வழக்கு த ள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உரிய ஆவணம் இல்லாததால் வழக்கை நடத்தாததால் தள்ளுபடி செய்யப்பட்டது. அ.வ.எண்.450/2011 வழக்கானது 20.11.2013 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

3. பின்னிட்டு, 18.03.2014 அன்று ரங்கசாமி காலமாகிவிட்டார் என்றால் சரிதான். எனவே, வா.சா.ஆ.21 மற்றும் 22 ஆவணங்கள் 2 முதல் 12 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம்

ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>16 மற்றும் 17 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

16 மற்றும் 17 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur